## தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை – 2017

தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் மாத்திரம் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினம் வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 சொத்துக்களதும் பொறுப்புகளதும் நிலைமை

| நிதிக்கூற்று விடயம் | பெறுமதி |
|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா** |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 16,752,897 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 2,492,381 |
| மொத்தச் சொத்துக்கள் | 19,245,278 |

**உரிமை மூலதனமும் பொறுப்புகளும்**

| | |
|---|---|
| உரிமை மூலதனம் | 3,705,071 |
| **பொறுப்புகள்** | |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 13,840,972 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 1,699,235 |
| மொத்தப் பொறுப்புகள் | 19,245,278 |
| மொத்த வருமானம் | 30,592,712 |
| மொத்தச் செலவினம் | 27,064,820 |
| மிகை | 3,527,892 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வு மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி | ரூபா 25,000 மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கு முத்திரைக் கட்டணமாக ரூபா 25 அறவிட வேண்டுமாயினும், ரூபா 2,365,101 இடர்க் கடன் கொடுப்பனவுகள் சம்பந்தமாக 11 உத்தியோகத்தர்களிடமிருந்து முத்திரைக் கட்டணம் அறவிடப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| XXIV அத்தியாயம் | |
| (i) 3.5. ஆம் பிரிவு | கடன் தவணைப் பண அறவீடுகள் மற்றும் ஏனைய அறவீடுகள் தொடர்பாக உத்தியோகத்தர் ஒருவரது மாதாந்த அறவீடுகளின் மொத்த வரம்பு 40 சதவீதத்திற்கு மேற்படலாகாது. எனினும், அவ்வரம்பைக் கவனத்திற் கொள்ளாது 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 633,840 இடர்க் கடனாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 3.17.1 ஆம் பிரிவு | பிரதான கடனாளியின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் எந்தவொரு உத்தியோகத்தரும் அக்கடனாளியின் பிணையாளராக ஏற்றுக்கொள்ளப்படலாகாது. எனினும், அதற்கு முரணாக பிரதான கடனாளியினது பிணையாளராக அவரின் கீழ் உள்ள உத்தியோகத்தர் கைச்சாத்திட்டிருந்தார். |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 110 | அதிகாரசபையின் பிரதான மின் இணைப்பில் இழப்பு ஏற்பட்டிருந்தபோதும், அதனை இழப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிராததுடன், அதனைச் சீராக்குவதற்கு ரூபா 158,500 செலவிடப்பட்டுமிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | • குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவைப்படும் தொகையைச் சரிவர மதிப்பீடு செய்யாது முற்பணம் வழங்கியமையால் வழங்கிய முற்பணத்தில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்ட தொகை எஞ்சிய 39 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தொகை ரூபா 476,945 ஆனதுடன் வழங்கப்பட்ட முற்பணத்தில் 49 சதவீதமும் ஆகும்.<br><br>• ஒன்று முதல் 06 மாத காலதாமதத்தின் பின்னர் 18 சந்தர்ப்பங்களில் ரூபா 257,230 தீர்வு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>• முற்பணம் தேவைப்படுவதற்கு முன்னரே குறிப்பிடத்தக்க நாட்களுக்கு முன்னராக 13 சந்தர்ப்பங்களில் ரூபா 200,580 தொகையாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>• 2015 ஆம் ஆண்டில் 04 சந்தர்ப்பங்களில் வழங்கிய முற்பணத்தில் ரூபா 66,580, 2016 ஆம் ஆண்டில் 18 சந்தர்ப்பங்களில் வழங்கிய முற்பணத்தில் ரூபா 507,725, 2017 ஆம் ஆண்டில் 442 சந்தர்ப்பங்களில் வழங்கிய முற்பணத்தில் ரூபா 5,540,530, 2016 ஆம் ஆண்டில் விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கென 16 சந்தர்ப்பங்களில் வழங்கிய முற்பணத்தில் ரூபா 11,399,000 தொகையும் 2017 ஆம் ஆண்டில் விசேட நிகழ்ச்சித்திட்டங்களிற்கென 62 சந்தர்ப்பங்களின் போது வழங்கிய முற்பணத்தில் ரூபா 101,841,492 தொகையும் என மொத்தமாக ரூபா 119,355,327 தொகையானது 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியிலும் தீர்வு செய்யப்படாதிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையினது அதிகாரச் சட்டத்தின் பின்வரும் நோக்கங்களை ஈடேற்றுவதில் 2017 ஆம் ஆண்டிலும் கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகார சபையின் நோக்கங்களை ஈடேற்றுவதற்கு வெளிநாட்டுச் சந்தைகளில் வெற்றியைப் பெறுவதற்குஇயலுமான தேசிய தொழில் முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தும் நோக்குடன் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியே உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதல் என்பவற்றைத் தூண்டுவதற்கான ஊக்குவிப்பு.

(ii) தொழில்நுட்ப முன்னேற்றம், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேட்டன்ட் உரிமை வணிக மயப்படுத்தலுக்கான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டிற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்குதல்.

### 3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போட்டியுடனான முயற்சியாளர்களுக்கான புதிய தகவல்கள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்கென வாரத்தில் 30 நிமிடங்கள் வீதம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் திட்டமிட்டிருந்தபோதும், 2017 ஆம் ஆண்டில் 06 நிகழ்ச்சித் திட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) முயற்சி அபிவிருத்தி சேவை வழங்கும் 20 பேருக்கு முயற்சிகள் தொடர்பான தொழில்நுட்ப அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதற்கான இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிட்டு அதன் பொருட்டு ரூபா 500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், மீளாய்வாண்டின்போது ரூபா 14,000 செலவிடப்பட்டிருந்ததுடன், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட மாவட்டத்தில் மாவட்ட வியாபார நிறுவனங்களை அமைப்பதற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், 2017 ஆம் ஆண்டின் புதிய வியாபார நிறுவனங்கள் உருவாக்கப்படாதபோதும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 69,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நுண்ணிய, சிறிய, மத்திய அளவிலான முயற்சியாளர்களது பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்கு Issue Tracker அபிவிருத்திக்கென ரூபா 1 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நடவடிக்கைகள் 2015 தொடக்கம் மீளாய்வாண்டு வரை 03 மாவட்டங்களில் மாதிரிச் செயற்திட்டங்களாக நடாத்தப்பட்டிருந்ததுடன், தொழில் முயற்சியாளர்களது தீர்வு செய்யப்படாத பிரச்சினைகள் உள்ளடக்கப்பட்டமை மாத்திரமே நடைபெற்றிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது மாகாண மட்டத்தில் கொள்வனவாளர்களதும் விற்பனையாளர்களதும் 09 சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டபோதும், கண்டி மற்றும் கம்பஹா மாவட்டங்கள் இரண்டிலும் இரு சந்திப்புக்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ஊ) அதிகாரசபைக்கு ISO சான்றிதழைப் பெற்றுத் தரத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகஞ் செய்தல் மற்றும் முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு ISO 9001 அமுலாக்கலுக்கு மதியுரை நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அதிகாரசபைப் பதவியணியினரது அதற்கான ஒத்துழைப்பு நலிவடைந்து, பணியானது மந்த கெதியில் நடைபெற்றது.

**(எ) விசேட தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

(i) விசேட தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு அனுசரணையாக பதவியணியினரையும் பயிற்றுவிப்பாளர்களையும் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முயற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் I ஆம் II ஆம் கட்டங்களில் சகல மாவட்டங்களிலும் நடாத்தப்படுவதற்கு ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், 2017 ஆம் ஆண்டில் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டம் எதுவுமே நடாத்தப்படவில்லை.

(ii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சகல பல்கலைக்கழகங்களிலும் ''பட்டதாரி தொழில் முயற்சிப் பூங்கா'' பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி தெரிவு செய்யப்படும் பட்டதாரி தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கென ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டபோதும், களணி, யாழ்ப்பாணம், ஊவா பல்கலைக்கழகங்களில் மாத்திரமே இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு ரூபா 2,734,500 நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது.

(iii) விசேட தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 07 மாவட்டங்களில் நலன்பெறுநர்களை இனங்காணுதல், பயிற்சிக்கான தேவைகளை மதிப்பிடல், இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்குதல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்கென ரூபா 105,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டுமிருந்தது. 2017 ஆம் ஆண்டின்போது இச்செயற்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 102,452,492 முற்பணத்தில் 98 சதவீதம் இவ்வறிக்கைத் தினம் வரை தீர்வு செய்யப்படாதிருந்தது.

## 3.3 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆகும். உள்ளவாறான பதவியணி 23 ஆகும். 02 முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள், 06 முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள், 01 முகாமைத்துவ உதவியாளர் பதவி என்பன வெற்றிடமாக இருந்ததுடன், மீளாய்வாண்டிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) இலங்கையில் சிறிய அளவிலானதும் மத்திய அளவிலானதும் தொழில் முயற்சி அபிவிருத்தியை உற்சாகப்படுத்தலை அதிகரிப்பதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை விரிவடையச் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்கு ஊக்குவிப்பளித்தல் அதிகாரசபையின் பிரதான நோக்கமானபோதும், அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தவல்ல தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர்களது 13 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 08 வெற்றிடமாக இருந்தன.

(இ) அதிகாரசபையின் சாரதி ஒருவர் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் சம்பளமும் படியுமாக ரூபா 454,742, மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு, சீவனப்படியாக ரூபா 111,999 என மொத்தமாக ரூபா 566,741 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை அமைச்சிலிருந்து மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| (அ) | புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் | கணக்காய்வு ஐய வினாப் பதிவேட்டைப் பேணாமை |
| (ஆ) | முற்பணம் | முற்பணம் தீர்வு செய்யப்படுவதில் தாமதம் |
| (இ) | பதவியணி நிர்வாகம் | வெற்றிடம் நிரப்பப்படாமை |